//அவசரம் //

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க.எண். 1944/ஆ4/ 20245 நாள்.03.06.2025**

**பொருள் :** தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் –வேலூர் மாவட்டம் – TNPSC தேர்வுகள் நடத்திடும் அனைத்து பள்ளிகளுக்கும் தலைமை கண்காணிப்பாளர் ,அறைக்கண்காணிப்பாளர்களுக்கு கொள்குறி வகை (OMR முறையில்) வருவாய்த்துறை அளவிலான பயிற்சி நடைபெறுதல் –கலந்துக்கொள்ள தெரிவித்தல்–தொடர்பாக

**பார்வை :** வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.3165086 /2025 நாள் 02.06.2025

----

பார்வையில் காணும் மதிப்பிற்குரிய வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதங்களுகிணங்க நடைபெறவுள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC ) கொள்குறி வகைத்(OMR) தேர்விற்கு 04.06.2025 மற்றும் 05.06.2025 ஆகிய தேதிகளில் இத்துடன் இணைப்பில் காணும் பயிற்சி மையங்களில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் ,பிரிவு அலுவலர்கள் /உதவி பிரிவு அலுவலர்களால் இப்பயிற்சியானது வழங்கப்படவுள்ளது. எனவே இணைப்பில் காணும் பள்ளிகளின் தலைமை கண்காணிப்பாளர்கள் மற்றும் ஒவ்வொரு தேர்வு மைய பள்ளிகளிலிருந்து மூன்று அறைக்கண்காணிப்பாளர்கள் வீதம் பயிற்சியில் கலந்து கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 04.06.2025 மற்றும் 05.06.2025 ஆகிய தேதிகளில் நடைபெறும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC ) கொள்குறி வகைத்(OMR) பயிற்சியில் பள்ளிகளின் தலைமை கண்காணிப்பாளர்கள் மற்றும் ஒவ்வொரு தேர்வு மைய பள்ளிகளிலிருந்து மூன்று அறைக்கண்காணிப்பாளர்கள் வீதம் கல்ந்துகொள்வதை மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை / தனியார் பள்ளிகள்) உறுதி செய்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்

**இணைப்பு :**

1. **TNPSC தேர்வு நடத்தும் பள்ளிகளின் விவரம்**
2. **பயிற்சி நடைபெறும் இடம் மற்றும் நேரம்**

//ஓம்.//
முதன்மைக் கல்வி அலுவலர்(பொ),
வேலூர்.

பெறுநர்,

1. சார்ந்த பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை / தனியார் பள்ளிகள்) தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.